


# ஆகஸ்ட் 6
# ஆண்டவரின் உருமாற்றம்

இயேசு பாடுபடுவதற்கு ஓராண்டுக்கு முன் கலிலேயாவில் இருந்தார். ஒரு நாள் இராயப்பர், யாகப்பர், அருளப்பர் மூவரையும் அழைத்துக் கொண்டு தபோர் மலைக்குச் சென்றார். அவர்கள் முன் அவர் மறுரூபமானார். நம் தேவ இரட்சகரின் முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது. அவரது உடைகள் பனிக்கட்டியைப் போல் வெண்மையாயிருந்தன. மோயீசனும் எலியாசும் அங்கு வந்து இயேசுவுடன் பேசிக் கொண்டிருந்தனர். யெருசலேமில் இயேசு பட வேண்டிய பாடுகளைப் பற்றி அவர்கள் பேசினார்கள். இதையெல்லாம் கண்டு மகிழ்ந்த இராயப்பர், அங்கேயே தங்கிவிட விரும்பினார். ஆண்டவருக்கும், மோசயீனுக்கும் எலியாசுக்குமாக மூன்று கூடாரங்கள் அமைக்கலாம் என்றார். அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது பிரகாசம் பொருந்திய மேகம் ஒன்று இயேசுவை மறைத்தது. அதிலிருந்து ஒரு குரல் எழும்பியது. “இவரே நம் அன்புக் குமாரன்ளூ இவர் மேல் நாம் பிரியமாயிருக்கிறோம்ளூ இவருக்கு செவி கொடுங்கள்ளூ என்று அந்தக் குரல் கூறியது. சீடர்கள் மூவரும் சாஷ்டாங்கமாக குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களைத் தொட்டு எழுப்பினார். அவர்கள் எழும்பிப் பார்த்தபோது காட்சி மறைந்தது. இயேசு மாத்திரம் அங்கு நின்றார். இதை யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்று இயேசு விரும்பிக் கேட்டுக் கொண்டார்.

தபோர் மலையில் ஆண்டவரது மகிமையைக் கண்ட இவர்கள் ஒலிவ மரத்தோப்பில் ஆண்டவர் பட்ட மரண அவஸ்தையையும் கண்டார்கள். பின்னர் இவர்களுக்குத் துன்ப வேதனைகள் வந்த போது தபோர் மலைக் காட்சியானது இவர்களுக்கு பேராறுதலாய் இருந்தது. “சிறிது காலம் துன்ப வேதனைகளை பொறுமையுடன் சகித்தால், பின்னர் நித்திய காலத்துக்கும் இயேசுவின் அழகைப் பார்த்து மகிழலாம்” என்ற நினைவு அவர்களுக்கு துன்ப வேதனைகளைச் சகிக்கத்திடன் அளித்தது.

## சிந்தனை:

துன்ப துயர நேரங்களில், பரலோகத்தில் நித்தியத்திற்கும், நாம் கண்டு இருக்கும் இயேசுவின் தெய்வீக அழகைப் பற்றி சிந்திப்போம். துன்ப துயரங்கள் சொற்பக் காலமே பரலோக பேரின்பமோ நித்திய காலம் நீடிக்கும்.

## செபம்:

ஆண்டவரே, பரலோகத்தைப் பற்றி நாங்கள் அடிக்கடி நினைக்கும் வரம் தாரும்.